இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 332 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 28 – வெள்ளிக்கிழமை 12 ஜூலை 2024 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 332 : Thiruvalluvar Year - 2055 - Aani 28 - Friday 12 July 2024 - Dak 10 Pages ₹ 5.00

## விருப்பு வெறுப்புகளை மறந்து எல்லா மக்களுக்குமான பொதுவான அரசாக ஒன்றிய அரசு செயல்பட வேண்டும்!

# மக்களுக்காகவே நாங்கள்; என்றும் மக்கள் எங்களுடன்!

## தருமபுரி - பாளையம்புதூரில் - ஊரகப் பகுதிகளுக்கான 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தைத் தொடங்கி வைத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**தருமபுரி, ஜூலை 12-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (11.07.2024) தருமபுரி மாவட்டம், பாளையம் புதூர் ஊராட்சி, அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், ஊரகப் பகுதிகளில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தைத் தொடங்கி வைத்து, முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றுகையில், "விருப்பு வெறுப்புகளை மறந்து எல்லா மக்களுக்குமான பொதுவான அரசாக ஒன்றிய அரசு செயல்பட வேண்டும்!" என்று குறிப்பிட்டார்.**

**மேலும் முதல்வர் அவர்கள் தமது உரையில், "உன்னத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிக் காட்டுவோம்! மக்களுக்காகவே நாங்கள்! என்றும் மக்கள் எங்களுடன்!" என எழுச்சியுறக் குறிப்பிட்டார்.**

**இவ்விழாவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு ஒவ்வொரு தொகுதிக்கும் சென்று மக்களை நான் நேரடியாகச் சந்தித்தேன்! அந்த நிகழ்ச்சிக்கு 'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்'! என்று பெயர் வைத்தோம்! கொளத்தூர் மட்டுமல்ல, அதாவது என்னுடைய தொகுதி கொளத்தூர் மட்டுமல்ல. தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்துத் தொகுதிகளும் என்னுடைய தொகுதிகள் தான் என்ற எண்ணத்துடன் அந்தப் பயணத்தைத் தொடங்கினேன். மேடையில் எனக்கு அருகில் ஒரு பெரிய பெட்டி வைத்து, அதில், பொதுமக்கள் தங்களுடைய தொகுதிக்கான தேவைகளை, கோரிக்கைகளை எழுதி போட வைத்தோம்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.7.2024) தருமபுரி, பாளையம்புதூர் ஊராட்சி அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், "மக்களுடன் முதல்வர்" திட்டத்தை ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தி, 12,500 கிராம ஊராட்சிகளில் 2,500 முகாம்களின் மூலம் 15 அரசுத் துறைகளின் வாயிலாக 44 சேவைகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று, மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினைப் பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களைக் கேட்டறிந்தார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், முதல்வரின் முகவரி துறை சிறப்பு அலுவலர் த. மோகன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கி.சாந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கேலி மனிதர்களைத் தோற்கடித்து பெரிய வெற்றியைத் தந்தீர்கள்!

"ஆட்சிக்கு வந்த 100 நாட்களுக்குள் அதில் சாத்தியமாக இருக்கக்கூடிய அனைத்துக் கோரிக்கைகளையும் நிறைவேற்றிக் காட்டுவேன்" என்று சொன்னேன். உங்கள் முன்னால் அந்த பெட்டியைப் பூட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையமான அண்ணா அறிவாலயத்தில் பாதுகாப்பாகக் கொண்டு போய் வைத்தோம். உடனே எதிர்க்கட்சிகள் என்ன பேசினார்கள்? "இவர்கள் ஆட்சிக்கு வரப்போவதும் இல்லை; இந்தப் பெட்டிகளைத் திறக்கப் போவதும் இல்லை" என்ற இறுமாப்பில் கேலி செய்தார்கள், கிண்டல் செய்தார்கள். ஆனால், பொதுமக்களான நீங்கள் தி.மு.க. மீதும், என் மீதும் நம்பிக்கை வைத்து, அந்த கேலி மனிதர்களைத் தோற்கடித்து, எங்களுக்கு பெரிய வெற்றியைத் தேடி தந்தீர்கள்!

### 'முதல்வரின் முகவரி' என– நாம் தொடங்கிய புதிய துறை!

ஆட்சிக்கு வந்ததும், உங்களுடைய மனுக்களை கவனிப்பதற்காகவே புதியதாக ஒரு துறையை உருவாக்கினேன். அந்தத் துறையின் பெயர் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்'! என்னிடம் கொடுக்கப்பட்ட மனுக்களை துறைவாரியாக பிரித்தோம். அதிலிருந்து, நடைமுறைச் சாத்தியம் உள்ள 2 லட்சத்து 29 ஆயிரத்து 216 மனுக்களுக்கு உடனடியாகத் தீர்வு கண்டோம்!

### அனைத்து மனுக்களையும் – ஒரு குடையின் கீழ் கொணர்ந்தோம்!

மக்கள் வைத்த கோரிக்கைகளில் சாத்தியம் உள்ள அனைத்தையும் நிறைவேற்றி இருக்கிறோம். தேர்தலுக்கு முன்னால் பெறப்பட்ட மனுக்களுக்குத் தீர்வு கண்டவுடன், எங்களுடைய கடமை முடிந்துவிட்டது என்று நாங்கள் நினைக்கவில்லை. இனிமேல்தான், கடமை தொடங்குகிறது என்று நினைத்து, உழைப்பைக் கொடுத்தோம்! அதனால்தான், தொடர்ந்து மனுக்களைப் பெற்றோம்! அதை முறைப்படுத்தினோம்! எப்படியெல்லாம் முறைப்படுத்தினோம் என்று சொல்ல வேண்டும் என்றால், முதலமைச்சரின் தனிப்பிரிவு, முதலமைச்சரின் உதவி மையம், ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பு, 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' துறை என்று எல்லாவற்றையும்ஒருங்கிணைத்து, "முதல்வரின் முகவரி" என்று புதியதாக ஒரு துறையை உருவாக்கினோம்.

பொதுமக்களின் கோரிக்கைகள் எந்த இடத்திலும் எங்களின் பார்வையில் இருந்து தவறி விடக் கூடாது என்றுதான் இவை எல்லாவற்றையும் ஒருங்கிணைத்தோம். முதலமைச்சரின் தனிப்பிரிவில் பெறப்படும் மனுக்கள் மட்டுமில்லாமல், இணையதளம், அஞ்சல், சமூக வலைதளம், மாவட்ட நிர்வாகத்தின் மூலமாகத் தரப்படும் மனுக்கள், அமைச்சர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடம் கொடுக்கப்படும் மனுக்கள், இதுபோல, எல்லா மனுக்களும் ஒரே இடத்திற்குச் சென்று சேருகிறது. மக்களால் தரப்படும் எல்லா மனுக்களையும் ஒரு குடையின்கீழ் கொண்டு வந்தோம். அனைத்து மக்களின் கோரிக்கைகளும் தலைமைச் செயலகத்திற்கு வந்துவிடுகின்றன.

நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றது முதல், 'முதல்வரின் முகவரி' துறையின்கீழ் தற்போது வரைக்கும் பெறப்பட்ட, 68 இலட்சத்து 30 ஆயிரத்து 281 மனுக்களில் 66 இலட்சத்து 25 ஆயிரத்து 304 மனுக்களுக்கு உரிய முறையில் தீர்வு கண்டிருக்கிறோம்! அதிலும், இந்த தருமபுரி மாவட்டத்தில் மட்டும், 72 ஆயிரத்து 438 மனுக்களுக்கு சாதகமான முறையில் தீர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்போது நான் சொன்னதை எல்லாம் நீங்கள் அரசுத் துறையின் அலுவலர்களிடம் சென்று மனுக்களைக் கொடுத்தது பற்றி, ஆனால் அந்த நிலையை மாற்றி பொதுமக்கள் அதிகமாக அணுகும் முக்கியமான 13 அரசுத் துறைகள், நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் நேரடியாகச் சென்று மக்களாகிய உங்களிடம் உங்கள் ஊரிலேயே மனுக்களைப் பெற்று பதிவு செய்து அதற்கு 30 நாட்களுக்குள் தீர்வு காணும் வகையில் நான் உத்தரவிட்டேன். அதன்படி உருவானதுதான் இந்த 'மக்களுடன் முதல்வர்' திட்டம்.

> **"மக்களிடம் செல்! மக்களைப் பற்றி அறிந்து கொள்! மக்களுக்காகச் செயல்படு!" இதுதான் பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் எங்களுக்குச் சொன்னது! இதுதான், அவர்கள் எங்களுக்கு அமைத்துக் கொடுத்த பாதை! வழிகாட்டு நெறிமுறை! அந்த அடிப்படையில்தான், ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் மக்களுக்கான திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்! அதன் பலனை மக்கள் எனக்கு எழுதும் கடிதங்கள் மூலமாகவும் - நேரடியாக அவர்களைச் சந்தித்துப் பேசும் பொழுதும் நான் உணர்கிறேன்.**

முதற்கட்டமாக, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகர்ப்புறங்களை ஒட்டியிருக்கும் கிராம ஊராட்சிகளில் இந்த முகாம்கள் நடத்தப்பட்டன! இந்த முகாம்கள் வாயிலாகப் பெறப்பட்ட சுமார் 8 லட்சத்து 74 ஆயிரம் மனுக்களுக்கு இது வரைக்கும் தீர்வு கண்டிருக்கிறோம். இந்த தருமபுரி மாவட்டத்தில் நகரப் பகுதிகளில்,

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

---

## உயர்கல்வி நிறுவனங்களான ஐ.ஐ.டி.க்கள்கூட பொருளாதார மந்த நிலையில் தவிப்பு!

# கல்வித்துறையை பாழ்படுத்தி வருகிறது ஒன்றிய மோடி அரசு!

### மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி குற்றச்சாட்டு!

**புதுடெல்லி,ஜூலை 12-**

**மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசு, கல்வித்துறையை பாழ்படுத்தி வருவதாகவும், உயர்கல்வி நிறுவனங் களான ஐ.ஐ.டி.க்கள் கூட பொருளாதார மந்த நிலையில் தவிப்பதாகவும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.**



இதுகுறித்து ராகுல்காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில்,

தற்போது நாட்டின் மிகவும் மதிப்புமிக்க ஐ.ஐ.டிகள் போன்ற உயரிய நிறுவனங்கள் கூட பொருளாதார மந்த நிலையின் மோசமான விளைவுகளை எதிர்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

ஐ.ஐ.டிகளில் வேலை வாய்ப்புகளில் தொடர்ச்சியான சரிவு மற்றும் வருடாந்திர தொகுப்புகளின் சரிவு ஆகியவை தீவிர வேலையின்மையை எதிர்கொள்ளும் இளைஞர்களின் நிலையை மேலும் பாதிக்கப்பட்டுள்ளதாக ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

கடந்த 2022ம் ஆண்டில், 19 சதவீத மாணவர்களால், வளாக வேலை வாய்ப்பு பெற முடியவில்லை என்றும், நடப்பாண்டு இது 38 சதவீதமாக இரட்டிப்பாகி உள்ளதாகவும் கூறியுள் ளார்.

நாட்டின் மிகவும் பிரபலமான மற்றும் மரியாதைக்குரிய கல்வி நிறுவனங்களின் நிலையே இதுவாக இருக்கும்போது, பிற கல்வி நிறுவனங்களின் நிலை என்னவாகும் என்பதை சிந்திக்க வேண்டியது அவசியம்? என்றும் ராகுல்காந்தி சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்றைய இளைஞர்கள் வேலையில்லா திண்டாட்டத்தால் முற்றிலுமாக சிதைந்து போயிருப்பதாகவும், முதலில் வேலை இல்லை, அவ்வாறு வேலை கிடைத்தாலும் சரியான வருமானம் இல்லை என்றும் ராகுல் தெரிவித்துள்ளார்.

பிள்ளைகளை தொழிற்கல்வி கல்வியில் சேர்க்கவும், அந்த படிப்புகளுக்கு தயாராகவும் பெற்றோர்கள் லட்சக்கணக்கில் செலவழிப்பதாவும், மாணவர்கள் அதிக வட்டிக்குக் கடன் வாங்கி படிக்கும் நிலைக்குத் தள்ளப்படுவதாகவும் குறிப்பட்டுள்ள ராகுல் காந்தி, அதன்பிறகு அவர்களுக்கு வேலை கிடைக்காமலோ அல்லது, குறைந்த அளவு ஊதியத்தில்தான் வேலை கிடைப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். பா.ஜ.க.வின் மோசமான கொள்கைகள் மற்றும் கல்விக்கு எதிரான நோக்கத்தின் விளைவாகவே, இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக உள்ளதாக ராகுல்காந்தி கூறியுள்ளார்.

இந்தியாவின் கடின உழைப்பாளிகளான இளைஞர்களை இந்த நெருக்கடியிலிருந்து விடுவிக்க மோடி அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், எதிர்க்கட்சியானது இளைஞர்களின் முழுப் பலத்துடன் குரல் எழுப்பி, அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு அரசாங்கத்தை பொறுப்பேற்கச் செய்யும் என்றும் ராகுல்காந்தி உறுதிபட தெரிவித்துள்ளார்.

---

## தமிழகத்தில் 5 மாவட்டங்களில் கனமழை பெய்யும்!

### வானிலை ஆய்வு மையம் தகவல்!

*சென்னை, ஜூலை 12-*

*நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் நாளை, நாளை மறுநாள் கனமழை பெய்யும் என்று மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சென்னையில் மாலை அல்லது இரவு வேளையில் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு எனவும் கணிக்கப்பட்டுள்ளது. இது தவிர வேலூர், சிவகங்கை, புதுக்கோட்டை என பல பகுதிகளில் கணிசமாக மழை பெய்துள்ளது. வெப்பநிலையைப் பொறுத்த வரை அதிகபட்சமாக மதுரை விமான நிலை யத்தில் 39.7° செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளது. குறைந்தபட்சமாக ஈரோட்டில் 20.0° செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளது.*

*வானிலை: வரும் நாட்களில் நிலவும் வானிலை தொடர்பாக சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, இன்று தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஜூலை 12 மற்றும் 13 தேதிகளில் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.*

*நீலகிரி மற்றும் கோயம்புத்தூர், திருப்பூர் தேனி, திண்டுக்கல் மாவட்ட மலை பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. ஜூலை 14 முதல் 17 வரையிலான நாட்களில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை பொறுத்தவரை அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் மாலை / இரவு வேளையில், இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 30 - 31° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 25 - 26° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.*